# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

காலேப் யோசுவா

*4/130, காந்தி தெரு, சென்னீர்குப்பம்,*

📞: 044 – 26490183 Cell: 944470195

*பூந்தமல்லி, சென்னை - 600 056.*

# கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் ஆயுள் காப்பீட்டுக் கழகம்

1, **கிறிஸ்து இயேசுவுக்குள்** பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி **அழைக்கப்பட்டவர்களுமாயிருக்கிற தேவனுடைய** சபைக்கும், எனக்கும், உங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்** நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும் **கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது** பக்திவிருத்தி அடைவதற்காக கர்த்தரால் சுவிசேஷகனாக **ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா** எழுதுகிறதாவது : நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய **இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும்** சமாதானமும் **உண்டாவதாக.**

2, **பிரியமானவர்களே, தேவனிடத்தில் இரு பிரமாணங்கள் உண்டு. ஒன்று தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஜீவிப்பது. மற்றொன்று தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமலிருந்து மரிப்பது. ஒன்று ஜீவன். மற்றொன்று மரணம். தேவன் ஜீவனில் கிரியை செய்கிறார். சாத்தான் மரணத்தில் கிரியை செய்கிறான். உங்களுக்குள் தேவன் கிரியை செய்கிறாரா அல்லது சாத்தான் கிரியை செய்கிறானா என்பதை சோதித்துப் பார்க்க இதோ ஒரு சிறு செய்தித்தொகுப்பு.**

3, **கர்த்தர் எனக்குப் போதித்து, நான் நடக்க வேண்டிய வழிகளை எனக்குக் காட்டுகிறார். என் மேல் தம்முடைய கண்களை வைத்து, எனக்கு ஆலோசனை சொல்லுகிறார். இப்பொழுது என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது. என் நாவு விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத்தாணி. ஆனாலும் என் மூலமாய் கேட்டு, கண்டதை விசுவாசித்தவன் யார்? அவர்கள் ஜீவனைப் பார்க்கிலும்** மரணமே **விருப்பமாயிருக்கிறது என்கிறார்கள்.**

4, **கடந்த சில மாதங்களுக்கு முன்பு சாத்தான்** திருச்சியில் **இக்காலத்திற்குரிய செய்தியில் இருக்கிறோம் என்று கூறுகிறவர்கள் மத்தியில் புகுந்தான். அன்று ஏவாளை வஞ்சித்த சாத்தான், திருச்சியில் இக்காலத்துக்குரிய செய்தியில் முழுமையாக இல்லாத ஒரு நபரின் வலது பக்கத்தில் வந்து நின்றான். ஏவாள் வஞ்சிக்கப்பட்டது** போல **இந்த நபரும் வஞ்சிக்கப்பட்டார். ஏனெனில் இந்த நபருக்கு எதிலும் உறுதியான நிலை கிடைடயாது. இன்று ஒரு உபதேசம், நாளை மற்றொன்று. இப்படியாக அவர் மாறிக்கொண்டேயிருப்பார். ஆதலால் அவன், இவரை** எளிதில் **வஞ்சித்தான்.**

5, **அன்று ஏவாள் தன்னுடைய அனுபவத்தை ஆதாமோடு பகிர்ந்துக்கொண்டாள். அந்த விருட்சம் புசிப்பதற்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமாயிருக்கிறது என்று கண்டு, அதன் கனியை பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான். அவ்வண்ணமாகவே சாத்தானால் வஞ்சிக்கப்பட்ட அந்த நபர், சாத்தானோடு ஒருமித்து அவனை கூட்டிக்கொண்டு, சத்தியத்தில் வைராக்கியமாக உள்ள ஒரு சகோதரனிடம் சென்று, சாத்தானை அவருக்கு அறிமுகப்படுத்தினார். அன்று ஆதாம் புசித்தான், அதேபோன்று இந்த சகோதரன் சாத்தானோடு ஒப்புரவாகினார்.**

6, **இந்த சகோதரன் சாத்தானோடு எதினால் ஒப்புரவாகினார்? இவர் எப்பொழுதும் *இயேசுவே வாரும்* செய்தி தொகுப்புகளை ஒழுங்காக படித்து கிரமமாக தியானிப்பவர். ஆனால் இந்த சாத்தானுடைய காரியங்கள் குறித்து செய்தித்தொகுப்புகளில் நான் எழுதி வந்த போது அதை இவர் அலட்சியப்படுத்தினார். தியானிக்கவில்லை. அது தனக்கு தேவையில்லை என விட்டுவிட்டார். அன்று சாத்தானை பற்றிய காரியங்களை தியானித்திருப்பாராகில் இன்று சாத்தானுக்கு இடம்** கொடுத்திருப்பாரா?. **அறியாமையினால் தவறிப்போயிருப்பாரா? சாத்தானுடைய தந்திரங்களை நன்கு அறிந்திருப்**பார். அவனை விட்டு விலகியிருப்பார். இன்று அந்த சகோதரன் தவறிவிட்டேனே என **வருத்தப்படுகிறார்.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

7, **இனியாவது திருச்சிக்குள் சாத்தான் மீண்டும் நுழையாதபடிக்கு, தலைதூக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து உங்கள் ஆத்துமாக்களை காத்துக்கொள்ளுங்கள்.** இன்று சாத்தான் திருச்சிக்குள் நுழைய **காரணமாயிருந்த இரு சகோதரர்களையும் கர்த்தர் கிருபையாக மன்னித்து, இருவர் மேலும் இரக்கம் பாராட்டுவாராக.**

8, **ஆதலால் கிறிஸ்துவுக்குள்** எனக்கு பிரியமானவர்களே, ***இயேசுவே வாரும்*** **இதழில்** வரும் **செய்தித்தொகுப்புகள் யாவும் உங்கள் பக்திவிருத்திக்காகவும், உங்கள் ஆத்துமா நன்மைக்காகவும், கள்ள உபதேசங்கள், கள்ளகபடமுள்ள வேலையாட்களை குறித்து நீங்கள் எச்சரிக்கையாயிருக்கவும் எழுதப்படுகிறது. உங்களுக்கு இலவசமாகவே அனுப்பிவைக்கப்படுகிறது. ஆனாலும் அதற்காக சிலர் தியாகம் செய்கிறனர். பல சிரமங்கள் மத்தியில் இது உங்கள் கரங்களில் வந்து தவழ்கிறது. சொல்லப்போனால் ரூ.104/- க்காக J.M DTP வுடன் பிரச்சனை. நான் கர்த்தருடைய பணத்தை ஏனோதானோ என்று செலவு செய்ய முடியாது. அவர்கள் ரூ,48/- வாங்கவேண்டிய இடத்தில் நியாயமில்லாமல் ரூ152/- வாங்கி நண்பனிடமே/ அவர்களுக்கு வேதகமத்திலுள்ள**

சத்தியங்களை எடுத்து கூறியவனிடமே/ உடன் பந்தியில் அமர்ந்து புசித்தவனிடமே ரூ 104/- அதிகம் வசூலித்தார்கள். ஆதலால் என் குடும்பத்தினருக்கு ரூ,600/-யை விட்டுக்கொடுக்க மனமில்லை. அந்த அளவிற்கு சாத்தான் அவர்கள் இருதயத்தை கடினப்படுத்தினான். பிரியமானவர்களே, உங்கள் இருதய கதவுகள் இந்த செய்தித்தெகுப்பு மூலம் தட்டப்பட்டுகிறது. J.M DTP மேடத்தைப் போன்று உங்கள் இருதயம், மனம் கடினப்படாமல், உங்கள் கரங்களுக்கு இலவசமாக வரும் செய்தித்தொகுப்புகளை தியானியுங்கள். உங்கள் ஆத்துமாவை காத்துக்கொள்ளுங்கள்.

9, பிரயோஜனமாயிருக்கிறதை நான் உங்களுக்கு போதித்து, நீங்கள் நடக்கவேண்டிய வழிகளில் உங்களை நடத்தவேண்டிய உக்கிராணப்பொறுப்பு எனக்கு கொடுக்கப்பட்டுள்ளது. நான் அதை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டேன். நான்கு பக்கங்களிலும் எதிர்பின் மத்தியில் கடந்த 29 ஆண்டுகளாக நான் என் பணியை செய்துவருகிறேன். இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ளவர்களுக்கு நிந்தையானேன் எனக்கு அறிமுகமானவர்களுக்கு அருக்களிப்புமானேன். செத்தவனைப் போல எல்லாராலும் முழுவதும் மறக்கப்பட்டேன். உடைந்தப்பாத்திரம் போலானேன். அநேகர் சொல்லும் அவதூறைக் கேட்டேன். முகாந்திரமில்லாமல் என்னை பகைத்தார்கள். ஆனால் என்னை அழைத்தவரோ, எனக்கு நான்கு பக்கங்களிலும் பக்கதுணையாயிருந்து வருகிறார். கர்த்தர் தமது முகத்தை தமது ஊழியக்காரன் மேல் பிரகாசிக்கப்பண்ணுகிறார். கர்த்தர், தாம் அபிஷேகம் பண்ணினவனுக்கு அரணான அடைக்கலமாயிருக்கிறார். ஆதலால் நான் ஒருக்காலும் அசைக்கப்பட்டதில்லை, படுவதில்லை. தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக. ஆம், கர்த்தர் என் மேல் நினைவாயிருக்கிறார். என் சுகத்தை, நலனை விரும்புகிறார்.

10, வாருங்கள், இப்பொழுது நமது தலைப்பைக் குறித்து தியானிப்போம். நம்மில் பலர் ஆயுள் காப்பீட்டுக்கழகத்தில் பாலிதாரர்களாக சேர்கின்றனர். ஏன்? வாழ்க்கையில் எதிர்ப்பாராத நஷ்டம் ஏற்பட்டால் அதை ஈடுசெய்ய. அப்படியானால் ஆயுள்காப்பீடு என்பது என்ன? வாழ்க்கையில் எதிர்ப்பாராத நஷ்டம். அந்த நஷ்டத்தை ஈடுசெய்ய ஒரு கம்பெனியுடன் நீங்கள் செய்யும் ஒரு ஒப்பந்தம் ஆயுள்காப்பீடு ஆகும். நம்முடைய வாழ்க்கையில், நம்முடைய பிரயாணத்தின் போது எதிர்பாராத விபத்து ஏற்பட்டு, அதினால் மரணம் ஏற்படுகிறது. மேலும் இயற்கையினால் நமது ஆஸ்திகளுக்கு, சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுகிறது. உதாரணமாக பெரும் மழையினால் வீடு, நெற்பயிர், வாழை போன்றவைகளுக்கு சேதம் ஏற்படுகிறது. அதேபோல் கடும் புயலினாலும் மேற்கூறியவைகளுக்கு சேதம் ஏற்படுகிறது. மேலும் நெருப்பினால் நமது சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுகிறது, இப்படியாக பலவிதமான வழிகளில் நமக்கோ, நமது ஆஸ்திகளுக்கோ, நமது சொத்துக்களுக்கோ சேதம் ஏற்படுகிறது. சேதத்தை ஈடுசெய்ய காப்பீடு கழகத்தில் சேர்கிறோம்.

11, ஆனால் தீங்கு நாளில் கர்த்தர் நம்மை தம்முடைய கூடாரத்தில் மறைத்து, கூடாரமறைவிலே ஒளித்துவைப்பார் என்பதை நாம் மறந்துவிடுகிறோம். (சங்.27:5). தாவீத்தை பாருங்கள், எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை எனக்கு தாபரமாகக் கொண்டேன். ஆதலால் பொல்லாங்கு எனக்கு நேரிடாது, ஒரு வாதையும் என் கூடாரத்தை அணுகாது என்கிறான். (சங். 91:9& 10). சங்கீதக்காரன் மேலும் கீழ்க்கண்டவாறு தன் அனுபவத்தை கூறுகிறான். என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும் : நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன். (சங் : 23:6). அவனுடைய அனுபவச் சாட்சியை நாமும் நம்முடைய வாழ்க்கையில் பிரதிப்பலிப்போம். கர்த்தர் புயல் காற்றுக்கு நமக்கு ஒதுக்காகவும், பெருவெள்ளத்திறகு புகலிடமாகவும் (ஏசா. 32:2) இருக்கும்போது நாம் வேறொரு அடைக்கலத்தை, புகலிடத்தை தேடுவது, நாடுவது என்ன? ஆம், தேவன் நமக்கு கொடுத்துள்ள பாதுகாப்பு மீது அவிசுவாசம் கொண்டுள்ள ஜனங்களுக்கே ஆயுள்காப்பீடு தேவைப்படுகிறது. ஆம், அவிசுவாசிகளுக்கும், பாவனைவிசுவாசிகளுக்கும் தான் ஆயுள் காப்பீடு தேவைப்படுகிறது. கிறிஸ்துவின் மணவாட்டிக்கு ஆயுள்காப்பீடு தேவையில்லை. அவளுடைய ஆயுள்காப்பீடு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற மகத்துவமுள்ள நாமம். அந்த நாமமே அவளது ஆயுள்காப்பீட்டுக்கழகம்.

12, நாம் ஆயுள்காப்பீட்டுக்கழகத்தில் ஒரு தொகையை நிர்ணயித்து, அந்த தொகையை பிரதிமாதம் அல்லது மூன்றுமாதங்களுக்கு ஒரு முறை அல்லது அரை ஆண்டுக்கு ஒரு முறை பிரிமியமாக செலுத்தி வந்தால், நமக்கு தீடீரென ஏற்படும் சேதத்திற்கு அந்த கம்பெனி நமக்கு நஷ்டஈடு கொடுத்து உதவுகிறது. அது நமது ஆஸ்திகளுக்கும், சொத்துக்களுக்கும், நமக்கும், பாதுகாப்பு அளிக்கிறது. ஆனால் நீ அந்த கழகத்திற்கு கட்டவேண்டிய தொகையை ஒழுங்காக செலுத்திவராவிட்டால் அந்த கழகம் உன்னை கைவிட்டுவிடும்.

13, உதாரணமாக ஒருவர் கழகத்திற்கு தன் உயிரை ரூ 5,00,000/- க்கு அடமானம் வைக்கிறார். அதற்காக மாதாமாதம் ஒரு தொகையை பிரிமியமாக செலுத்திவருகிறார். அந்த ஐந்து லட்சத்தை செலுத்தி முடிக்கும் வரை அவர் உயிர் அவரை விட்டு பிரியாவிட்டால், அதனால் அவருக்கு அதிகபட்சமான லாபம் எதுவும் இல்லை. ஏதோ முதலோடு வட்டி மட்டும் கிடைக்கும். ஒரு லட்சம் செலுத்தி முடித்த காலத்தில் அவர் உயிர் அவரைவிட்டு பிரிந்தால், அவருக்கு தன் உயிரை அடமானமாக வைத்த ரூ 5,00,000/- கிடைக்கும். அதாவது அவர் குடும்பத்திற்கு அந்த ரூ 5,00,000/- போய் சேரும்.

14, ஆக ஆயுள் காப்பீடு செய்யும் ஒருவர் தான் காப்பீடு செய்த முழுத்தொகையையும் செலுத்திவிட்டால் அவருக்கு லாபம் ஒன்றும் இல்லை. முழுத்தொகையையும் செலுத்தி முடிக்காத நிலையில். அவர் உயிர் அவரைவிட்டு பிரிந்தால் லாபம். ஆக ஒரு ஆயுள்காப்பீட்டுக்கழகத்திலிருந்து நீ லாபம் பெறவேண்டுமானால் உன் உயிர் உன்னைவிட்டு சீக்கிரத்தில் பிரிய வேண்டும். அதுதான் உனக்கு ஆதரவு. நீ உயிரோடு இருக்கும் வரை அந்த கழகத்தினால் உனக்கு ஆதாயமில்லை. நீ காப்பீட்டுத்தொகை முழுவதையும் செலுத்தி முடிக்காத நிலையில் இறந்தால் தான் உன் குடும்பத்திற்கு லாபம். ஆக நீ மரித்தால் தான் உன் குடும்பத்திற்கு அந்த கழகத்தினால் லாபம். நீ ஜீவித்தால் காப்பீட்டுக்கழகத்திற்கே லாபம். உன் குடும்பத்திற்கு லாபம் இல்லை.

15, பொதுவாக நாம் ஆயுள்காப்பீடு செய்யும் நோக்கமே நான் மரித்தால் நான் காப்பீடு செய்த தொகை எனது குடும்பத்திற்கு கிடைக்கும். அது அவர்களுக்கு ஆதரவாக இருக்கும் என்பதே.

16, ஆனால் கர்த்தர் உங்களுக்கு கொடுத்துள்ள சில வாக்குத்தத்தங்களை இங்கு கவனிங்கள் :

அ) உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. உன் திக்கற்ற பிள்ளைகளை என்னிடத்தில் ஒப்புவி. (எரே. 49:11) உன் மரணத்தை குறித்து கவலைப்படதே. உனக்கு ஜீவனை கொடுப்பதும் நான் தான். உன் ஜீவனை எடுப்பதும் நான்தான். ஆதலால் உன் விதவை மனைவி என்னை நம்புவாளாக. ஆதரவற்ற உன் பிள்ளைகளை என்னிடத்தில் ஒப்புவி. நான் அவர்களை போஷிப்பேன், பராமரிப்பேன் என்கிறார். பாருங்கள் சிறுமைப்பட்டவனுக்கு கர்த்தர் அடைக்கலமானவர். நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர். கர்த்தாவே உம்மை தேடுகிறவர்களை நீர் கைவிடுவதில்லை : ஆதலால் உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பி இருப்பார்கள். (சங் 9: 9& 10.)

ஆ) கர்த்தருக்கு பயப்படுகிறவனுக்கு திட நம்பிக்கை உண்டு அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும். (நீதி ,14:26. )

இ) கர்த்தருக்கு பயப்படுகிறவர்களே, கர்த்தரை நம்புங்கள் : அவரே அவர்களுக்கு துணையும், அவர்களுக்கு கேடகமுமாய் இருக்கிறார். (சங் 115: 11).

ஈ) இதோ நானும் கர்த்தர் எனக்கு கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும், அற்புதங்களாகவும் இருக்கிறோம். (ஏசா. 8: 18).

உ) எளியவன் என்றைக்கும் மறக்கப்படுவதில்லை : சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கை ஒருபோதும் கெட்டு போவதில்லை (சங் ,9:18).

ஊ) கூப்பிடுகிற எளியவனையும் உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார். (சங். 72:12).

எ) கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகாவறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவை திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார் : நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தை போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய். (ஏசா. 58: 11).

ஏ) படுக்கையின் மேல் வியாதியாய் கிடக்கிற அவனை கர்த்தர் தாங்குவார் : அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவீர். (சங். 41:3). அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். (1 பேது. 2 : 24).

ஐ) உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய், உனக்கு பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். (சங் . 128:2)

ஒ) நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழை பெய்யப் பண்ணுவேன் : பூமி தன் பலனையும், வெளியில் உள்ள மரங்கள் தங்கள் கனிகளையும் கொடுக்கும். (லேவி. 26:4).

ஓ) நீ உன் தானியத்தையும் உன் திராட்சை ரசத்தையும் உன் எண்ணெய்யையும் சேர்க்கும்படிக்கு, நான் ஏற்றகாலத்தில் உங்கள் தேசத்தில் முன்மாரியையும், பின் மாரியையும் பெய்யப்பண்ணி, மிருக ஜீவன்களுக்காக உன் வெளிகளிலே புல் முளைக்கும்படி செய்வேன், நீ சாப்பிட்டு திருப்தியடைவாய். (உபா. 11: 14,15).

ஔ) கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் எனது வலதுப்பக்கத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. (சங். 16:8).

ஃ) கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்: நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார். (சங்.55 :22).

க) உன் காலைத் தள்ளாடவொட்டார் : உன்னைக் காக்கிறவர் உறங்கார். (சங் .121:3).

கா) கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு : அவர் உன்னை ஆதரிப்பார் : நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார். (சங்.55 :22). உன் மனைவியை பற்றிய பாரத்தை, உன் பிள்ளைகளை பற்றிய பாரத்தை, உன் ஜீவனத்தின் தேவைகளுக்கடுத்த பாரத்தை கர்த்தர் மேல் வைத்துவிடு. அவர் உன்னை ஆதரிப்பார். ஆதலால் நீ செய்யவேண்டியது ஒன்று, அது அவர் மேல் உன் பாரத்தை வைப்பதே! அவர் தம்முடைய வார்த்தையை காத்துக்கொள்வார்.

கி) நீங்கள் அடங்கி கர்த்தரை சேவித்தால், உங்கள் நாட்களை நன்மையாகவும், உங்கள் வருஷங்களை செல்வ வாழ்க்கையாகவும் போக்குவீர்கள் (யோபு . 36: 12). நீ கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளில் நடக்கும் போது நீ உன் ஆயுள் முழுவதும் ஒரு செல்வ வாழ்க்கை வாழலாம், அப்படியிருக்க உனக்கு உலகப்பிரகாரமான ஆயுள்காப்பீடு ஏன்? தேவையில்லையே!.

கீ) இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்கிறார். ஆமென். (மத் . 28 :20).

17, பிரியமானவர்களே நீங்கள் அசதியாய் இராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரணநிச்சயத்தோடும், நீடிய பொறுமையோடும் சுதந்தரித்து கொள்ளுங்கள். பாருங்கள் ஆபிரகாம் பொறுமையாய் காத்திருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெற்றான். (எபி .6:11, 15). ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக. (கலா . 3:6,7). நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்கள் (யோ.8:39). நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராகவும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள். (கலா. 3:29).

18, ஆம் பிரியமானவர்களே அநாதி தேவனே நமக்கு அடைக்கலம், புகலிடம். அவரே நமது நம்பிக்கை. பாருங்கள் தேவனுக்கு மகிமை உண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே. ஆம், தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் ஆம் என்றும், அல்ல என்றும் இராமல், ஆம் என்றேயிருக்கிறார். (2 கொரி . 1:19&20).

19, ஆகையால் கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, மேகம் போன்ற இத்தனை திரளான வாக்குத்தத்தங்கள் நம்மை சூழ்ந்துக்கொண்டிருக்க, பாரமான யாவற்றையும் தள்ளிவிட்டு, அஞ்ஞானிகள் நாடி தேடுகிறபடி எண்ணத்தை உண்போம், எண்ணத்தை குடிப்போம், எண்ணத்தை உடுப்போம் என்று கவலைப்படாது, இவையெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறபடியால், நாளைக்காக கவலைப்படாது அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும் என்ற மனரம்மியத்துடன் முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்கு கூடக்கொடுக்கப்படும். தியானியுங்கள் (மத். 6: 31-34).

20,

கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்
கவலை கஷ்டங்கள் தீர்ந்திடும்
கைவிடா காத்திடும் பரமனின்
கரங்களை நாம் பற்றிக் கொள்வோம்.

உண்மை வழி நடந்திடும்
உத்தமனுக்கென்றும் கர்த்தர் துணை
கண்கள் அவன் மீது வைத்திடுவார்
கருத்தாய் காத்திடுவார்.

21, இப்பொழுது கவனியுங்கள் ஆயுள்காப்பீடு கழகம் நீ காப்பீடு செய்த பணத்தை, நீ இறந்துவிட்டால் உன் விதவைக்கு கொடுத்துவிடுகிறேன் என்கிறது. அதுவும் நீ காப்பீடு செய்த தொகையை மட்டுமே. அது அந்த விதவைக்கு ஒரு ஆண்டு ஜீவனத்திற்கு போதுமா? அல்லது வாழ்நாள் முழுவதும் ஜீவனத்திற்கு போதுமா? அதுகுறித்து அந்த காப்பீட்டுக்கழகத்திற்கு கவலையில்லை. ஆனால் நமது தேவன் தலைமுறை தலைமுறையாக நமக்கு அடைக்கலமானவர். (சங். 90: 1).

22, ஆதலால் என்னத்தை உடுப்போம், என்னத்தை குடிப்போம், என்று கவலைப்படாதீர்கள் முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் : அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கொடுக்கப்படும் என்று திருவுள்ளம் பற்றின தேவன் (மத். 6:25-34) உன் விதவை என்னை நம்பட்டும், உன் பிள்ளைகளை என்னிடத்தில் ஒப்புவி, நான் அவர்கள் ஆயுள் முழுவதும் அவர்களை போஷிப்பேன், பராமரிப்பேன் என்கிறார். என்ன ஒரு பெரிய ஆறுதல் பாருங்கள்? எக்காலத்திலும் அவரை நம்புங்கள் என சங்கீதக்காரன் கூறுகிறான். (சங். 62:8). இந்த ஆறுதலை உங்கள் ஆயுள்காப்பீட்டுக்கழகம் கொடுக்க முடியுமா? முடியவே முடியாது! அது தேவன் ஒருவராலே உனக்கு கொடுக்க முடியும். ஆதலால் அவரே உனது ஆயுள்காப்பீட்டுக் கழகமாய் இருக்கட்டும்

23, ஆம் பிரியமானவர்களே கர்த்தரை தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. (சங். 34:10). நீ கர்த்தருக்கு உன்னை ஒப்புக்கொடு, உன் ஆவி, ஆத்துமா சரீரத்தை தேவனிடத்தில் ஒப்புவி. கர்த்தர் உனக்கு அருளின ஆஸ்தி, சொத்து, சுகங்கள் அனைத்தையும் தேவனிடத்தில் ஒப்புக்கொடு. நீ அவரிடத்திலிருந்து பெற்ற அனைத்தையும் அவருக்கே ஒப்புக்கொடு. அவர் உன் ஆயுள் முழுவதும் அனுதினமும் போஷிப்பார், பராமரிப்பார், வழிநடத்துவார்.

24, பாருங்கள் அன்று கர்த்தர் யோசுவாவை நோக்கி : நான் உன்னைவிட்டு விலகுவதும் இல்லை : உன்னை கைவிடுவதும் இல்லை : ஆதலால் பெலன்கொண்டு திடமனதாயிரு என்றார். (யோசு. 1:5,6).

25, மேலும் மோசே இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி : நீங்கள் பெலன் கொண்டு திடமனதாய் இருங்கள், உன் தேவனாகிய கர்த்தர் தாமே உன்னோடு கூட வருகிறார் : அவர் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை என்று சொன்னான். (உபா 31 : 6).

26, பின்பு மோசே, யோசுவாவையும் நோக்கி : கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார் : அவர் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை : நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான். (உபா 31 : 8)

27, தாவீது தன் குமாரனாகிய சாலொமோனை நோக்கி : நீ பயப்படாமலும் கலங்காமலும் இரு : தேவனாகிய கர்த்தர் என்னும் என் தேவன் உன்னோடேயிருப்பார் : அவர் உன்னைவிட்டு விலகமாட்டார், உன்னை கைவிடமாட்டார் என்றான். (1 நாளா. 28:20)

28, இதோடு மட்டுமா ? பவுல் : நீங்கள் பணஆசை இல்லாதவர்களாய் நடந்து : உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள் : நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே, அதினாலே நாம் தைரியம் கொண்டு : கர்த்தர் எனக்கு சகாயர் : நான் பயப்படேன் என்று சொல்லலாமே என்று எபிரேயருக்கு எழுதுகிறான். (எபி . 13: 5,6).

29, இந்த வாக்குத்தத்தங்கள் யாருக்கு ? ஆபிரகாமின் குமாரருக்கும், குமாரத்திகளுக்கும் தானே. அப்படியானால் இந்த வாக்குத்தத்தங்கள் உங்களுக்கும் எனக்கும் தானே. ஆதலால் பிரியமானவர்களே பணஆசை வேண்டாம். இருக்கிறவைகள் போதும் என்று எண்ணுங்கள். கர்த்தர் கைவிடார். அவர் நமக்கு சகாயர். பணஆசை எல்லா தீமைக்கும் வேராய் இருக்கிறது : சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி அநேக சோதனைகளாலே

தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள். (1 தீமோ. 6:10). அன்று மட்டுமல்ல இன்றும் அநேகர் தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள்.

30, ஆம் பிரியமானவர்களே, ஆயுள் காப்பீட்டுக்கழகம் கொடுக்கமுடியாத ஒரு பெரிய பாதுகாப்பை நம் தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். அதாவது : நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை (எபி. 13 : 5). என்கிறார். எதுவரை? இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூடயிருக்கிறேன் என்கிறார். (மத். 28: 20).

31, பாருங்கள் சங்கீதக்காரன் என்ன கூறுகிறான்? நான் இளையவனாய் இருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன். நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன் சந்ததி அப்பத்திற்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை என்கிறான். (சங். 37 : 25). இங்கு தாவீது கூறுவதை சற்று ஆழமாக தியானியுங்கள். ***அவன் இரந்து திரிந்தை என்று கூறாமல், இரந்து திரிகிறதை*** என்று எல்லா காலத்திற்கும் பொருந்தும் ஒரு நித்திய பாதுகாப்பை கூறுகிறான். அதாவது நீதிமான் கைவிடப்படுவதில்லை. அவன் சந்ததி அப்பத்திற்கு இரந்து திரிகிறதில்லை. அது என்றும் நிகழ்காலத்திற்குரிய ஒரு வாக்குத்தத்தம். எனெனில் இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும் என்றும் மாறாவராயிருக்கிறார். (எபி . 13:8). அவர் இருக்கிறவராக இருக்கிறேன் என்பவர். (யாத் . 3:16). அவருடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறது. (2 கொரி . 1 : 20).

32, நம்முடைய வாழ்க்கையிலே உண்ண உணவும், உடுக்க உடையும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும் : என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்திற்காகவும் கவலைப்படாதீர்கள் என்று கர்த்தர் கூறுகிறார். (மத் .6 : 23). இதோடு மட்டுமா? நாளைக்காக கவலைப்படாதிருங்கள் : நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காக கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும். (மத். 6: 34). அஞ்ஞானிகள் தாம் இவைகளுக்காக கவலைப்படுகிறார்கள். ஆனால் உங்கள் பரமபிதா உங்களுக்கு இவைகளெல்லாம் தேவையென அறிந்திருக்கிறார். ஆதலால் நாம் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை என நாம் மேலும் வாசிக்கிறோம். நமது வாழ்க்கையில் அத்தியாவசியமான தேவைகள் நமக்கு கொடுக்கப்படும் என வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. நான் என்னுடைய 29 ஆண்டு ஊழியத்தில் கண்டது, என் தேவன் என் தேவைகளை ஏற்ற வேளையில் சந்திக்கிறார். என்னை அனுதினமும் போஷிக்கிறார், உடுத்துவிக்கிறார். உண்ண உணவும், உடுக்க உடையும் இருக்க வீடும் கொடுத்து, என்னை இந்த வனாந்தர ஜீவியத்தில் ஆதரித்து வழிநடத்துகிறார். ஆம் பிரியமானவர்களே, ஆயுள் காப்பீட்டுக்கழகம் கொடுக்கும் உத்திரவாதத்தைவிட அதிகமான உத்திரவாதத்தை நம் தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். நான் என் வாழ்கையின் பாதையில் 2/3 முறை நிர்ப்பந்தத்தின் பேரில் ஆயுள்காப்பீடு செய்தேன். சிலமாதங்களில் பிரிமியம் கட்டமுடியாத சூழ்நிலைகள் உருவாகி, தடை ஏற்பட்டது. என் தேவன் நான் அதை தொடர அனுமதிக்கவேயில்லை.

33, நாம் நம்முடைய தேவைகளை தேவனிடத்தில் கேட்டு பெற்றுக்கொள்ளவேண்டும். ஏனெனில் தேவனுடைய வார்த்தை கீழ்க்கண்டவாறு கூறுகிறது : ***கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்*** (மத். 7: 7). அதே நேரத்தில் நமக்கு கேட்டதை பெற்றுகொண்டோம் என்ற விசுவாசம் தேவை. (1 யோ. 5: 14,15). நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்கு செவி கொடுக்கிறார் என்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக்கேட்டாலும், அவர் நமக்கு செவி கொடுக்கிறார் என்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளை பெற்றுக்கொண்டோம் என்றும் அறிந்திருக்கிறோம்.

34, பாருங்கள் கானானிய ஸ்திரீயை, தான் அவரிடத்தில் கேட்டதை பெற்றுக்கொண்டேன் என்ற விசுவாசம் அவளுக்குள் இருந்தது. ஆதலால் தான் கர்த்தர் அவளுடைய விசுவாசத்தை குறித்து : உன் விசுவாசம் பெரிது, நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவளுடைய மகள் ஆரோக்கியமானாள். (மத். 15:22-28). பாருங்கள் நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். ஏனென்றால் அவள் அவரிடத்தில் கேட்டதைப் பெற்று கொள்வேன் என்ற விசுவாசத்தைக் கொண்டிருந்தாள். தேவன் அவளுக்கு மாத்திரமா தேவன்? உங்களுக்கும், எனக்கும் அல்லவா! அப்படியானால் நீங்களும் நானும் கேட்டுக்கொள்ளுகிறதை தேவன் கொடுக்கவல்லவராயிருக்கிறார்.

35, கிறிஸ்துவுக்குள்ளான ஒரு விசுவாசி ஆயுள்காப்பீடு செய்வது தேவன் பேரில் கொண்டுள்ள அவிசுவாசமே. தேவனுடைய வார்த்தையின் மேல் கொண்டுள்ள அவிசுவாசமே. அப்படியானால் உன்னை நீ கிறிஸ்தவன், கிறிஸ்தவன் என்று அழைத்துக்கொள்ள தகுதியே கிடையாது. நீ கிறிஸ்துவின் மணவாட்டி என்று அழைத்துக்கொள்ள அருகதையேயில்லை. நீ தொடக்கத்திலே ஒரு வெள்ளாடு. நீ ஒரு செம்மறி ஆடு அல்ல. நீ ஒரு காகமாகயிருந்து கொண்டு மயிலின் சிறகுகளை உன் இறக்கையோடு கூட்டிக்கொண்டாய்.. அது எப்படியும் ஒருநாள் உன்னை அடையாளம் காட்டிக்கொடுத்துவிடும். நீ ஒரு அவிசுவாசியே. ஆனாலும் உன்னை விசுவாசி என்று கூறிக்கொண்டு திரிகிறாய். அது ஒருநாள் உன்னை காட்டிக்கொடுத்துவிடும். நீ ஒரு அவிசுவாசியாயிருந்துக்கொண்டு தேவனிடத்தில் எப்படி உரிமைக்கொண்டாட முடியும்? நன்மைகள் எதிர்பார்க்க முடியும்? ஒருக்காலும் கூடாது.

36, ஆயுள் காப்பீட்டுக்கழகத்தில் சேருகிறவர்களுக்கு சீக்கிரத்தில் மரணம் ஏற்பட வேண்டும். அப்பொழுது தான் அவர் குடும்பத்திற்கு லாபம். மற்றப்படி அதிகமான லாபம் எதுவுமில்லை. அவர் சேர்த்த சேமிப்பிற்கு சற்று வட்டியுடன் பணம் கிடைக்கும். அவ்வளவு தான். இதனால் பயன்பெறுவது அந்த கழகம் தான். ஆதலால் தான் அந்த கழகத்தில் பணிபுரிகிறவர்களுக்கு பல்லாயிரங்கள் சம்பளமாக கொடுக்க முடிகிறது. ஆக ஆயுள் காப்பீட்டுக்கழகத்தில் சேரும் ஒருவர் உயிரோடு இருப்பதைக்காட்டிலும் செத்தால் நலம். ஆம், ஆயுள்காப்பீடு மனிதனுடைய உயிரை பேரம்பேசி வியாபாரம் செய்யும் ஒரு தொழிலாகும். இதில் அடைக்கலம் தேடுகிறவர்கள் மாயையின் மறைவிலே அடைக்கலம் கொள்கிறார்கள்.

37, கிறிஸ்துக்குள்ளானவர்கள் ஒருவர் கால்களை ஒருவர் கழுவுவதால், அவர்களில் ஒருவரிடத்தில் ஒருவருக்கு பங்கு உண்டு (யோ .13:8). ஏனென்றால் இவர்கள் ஒரே சரீரத்தில் உள்ள வெவ்வேறு அவயவங்கள். (1.கொரி ,11: 27). இதிலுள்ள அவயவங்கள் ஒன்றை குறித்து ஒன்று கவலையாயிருக்கும் (1கொரி 11: 25) அவ்வண்ணமாக தேவன் அந்த சரீரத்தை அமைத்திருக்கிறார். பாருங்கள் இதில் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப்பாடுபடும். ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச்சேர்ந்து சந்தோஷப்படும். நாமே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களுமாயிருக்கிறோம். (1கொரி . 12: 26,27).

38, ஆதலால் ஒருவன் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவமாயிருப்பானாகில், தேவன் தன்னுடைய சரீரத்தில் அவயவமாய் உள்ள ஒன்றினுடைய தேவைகளை மற்றொன்றின் மூலமாகவும் சந்திக்கிறார். பாருங்கள் நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கவேண்டும் என்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதனுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவனிடத்திலுமில்லை. நான் உங்களுக்கு கற்பிக்கிறயாவையும் நீங்கள் செய்வீர்காளானால் என் சிநேகிதராயிருப்பீர்கள். (யோ . 15: 12-14). ஆம், சகோதர சிநேகம் நிலைத்திருக்கக் கடவது. (எபி . 13 :1).

39, ஆம், பிரியமானவர்களே கர்த்தரையே தங்கள் ஒரே நம்பிக்கையாய் கொண்டிருந்து உத்தம இருதயத்துடன் அவரை நேசிப்பவர்களுக்கு, சேவிப்பவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுப்படாது.

40, மாட்டை வெட்டுகிறவன் மனுஷனைக் கொல்லுகிறவனாகயிருக்கிறான். ஆட்டை பலியிடுகிறவன் நாயின் கழுத்தை அறுக்கிறவனாகயிருக்கிறான். காணிக்கை படைக்கிறவன் பன்றி இரத்தத்தை படைக்கிறவனாகயிருக்கிறான். தூபம் காட்டுகிறவன் விக்கிரகத்தை ஸ்தோத்தரிக்கிறவனாயிருக்கிறான். இவ்வாறாக அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வழிகளையே தெரிந்துக்கொண்டார்கள். அவர்களுடைய ஆத்துமா தங்கள் அருவருப்புகள் மேல் விரும்பமாயிருக்கிறது. (ஏசா .66 : 3). பிரியமானவர்களே நீங்களோ அப்படியிராமல், நான் கிறிஸ்துவின் மணவாட்டி என கூறும் நீ, கிறிஸ்துவை உன் இரட்சகராக ஏற்றக்கொண்ட நீ, கிறிஸ்துவின் மேல் உன் பாரத்தை எல்லாம் வைத்துவிட்ட நீ, கர்த்தர் தம் உள்ளங்கையில் உன்னை வரைந்திருக்கிறார் என்று கூறும் நீ, என் தாயும் தகப்பனும் என்னை மறந்தாலும் கர்த்தர் என்னை மறவார் என்று பாடும் நீ, ஆயுள் காப்பீட்டுக்கழகத்தில் சேர்ந்து உன் தேவனை மறுதலிக்கிறது என்ன? அப்படியானால் யூதாசுக்கும் உனக்கும் உள்ள வித்தியாசம் என்ன? உன் ஞானமும் அறிவுமே உன்னை கெடுத்தது.

41, முடிவாக பிரியமானவர்களே, உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் குற்றமற்றதாய் இருக்கும்படி காத்துக்கொண்டு நீங்கள் தேவனுக்கு உங்களை பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பீர்களானால் அதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆயுள்காப்பீடு. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் நீ அவயவமாக இல்லையென்றால் கிறிஸ்துவின் சரீரத்தில் உனக்குப் பங்கில்லை. நீ அவருடைய சரீரத்தின் ஒரு அவயவம் இல்லை. நீ அவருடைய மணவாட்டியுமில்லை. இது நிச்சயம். இந்த உலகப் பிரகாரமான ஆயுள் காப்பீட்டுக்கழகத்தில் அவயவமாயிருக்கிறவர்களுக்கு கிறிஸ்துவின் சரீரத்தில் இடமில்லை. அது நிச்சயம். அது 100 சதவீதம் உறுதி.

42, சாலச்சிறந்த, மிகவும் பாதுகாப்பான ஆயுள் காப்பீடு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற நாமமே. அது முற்றிலும் நம்பத்தக்க ஒன்று. வானமும் பூமியும் ஒழிந்து போகும். உங்கள் ஆயுள்காப்பீட்டுக்கழகமும் ஒழிந்துபோகும். ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் நாமம் ஒரு காலமும் ஒழியாது. அது நித்தியமானது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் காப்பீட்டுகழகத்தின் உறுதிமொழி என்ன? நீங்கள் பெலன்கொண்டு திடமனதாயிருங்கள். உன் தேவனாகிய கர்த்தர் தாமே உன்னோடு கூடவருகிறார் : அவர் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை என்பதே.

43,

கிறிஸ்துவின் அடைக்கலத்தில்
சிலுவையின் மாநிழலில்
கன்மலை வெடிப்பதனில்
புகலிடம் கண்டுக்கொண்டோம் ..... என ஒரு பக்தன் பாடுகிறான்.

44, பாருங்கள் பிரியமானவர்களே, இந்த புதிய ஆண்டு 2008 ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற காப்பீட்டுக் கழகத்தில் பாலிசிதாராக சேருங்கள். அவர் வருஷத்தை தம்முடைய நன்மையால் முடிசூட்டுவார். வருஷத்தின் துவக்கம் முதல் வருஷத்தின் முடிவு மட்டும் எப்போதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் உன் மேல் நோக்கமாயிருக்கும். என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். ஐசுவரியமும் கனமும், நிலையான பொருளும், நீதியும், என்னிடத்தில் உண்டு என்கிறார். (நீதி 8 : 18). ஆம், கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தை தரும் : அதனோடே அவர் வேதனையைக் கூட்டார். (நீதி 10: 22). கர்த்தாவே நாங்கள் உம்மை நம்பியிருக்கிறபடியே உமது கிருபை எங்கள் மேல் இருப்பதாக, ஆமென்.

45, கள்ளச்சபையாகிய ஸ்தாபன சபைகளை சேர்ந்த விசுவாசிகளும், உண்மையான சபையிலுள்ள புத்தியில்லாத கன்னிகைகளுமே இந்த உலகப்பிரகாரமான ஆயுள்காப்பீட்டுக்கழகத்தில் அங்கத்தினராக உள்ளனர். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவமாயுள்ள எந்த ஒரு நபரும் இதில் பாலிசிதாரராக இருக்க முடியவே முடியாது. நான் கிறிஸ்துவின் சரீராமாகிய சபையில், கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவமாயிருக்கிறேன் என கூறிக்கொண்டு இந்த உலகப்பிரகாரமான ஆயுள் காப்பீட்டுக்கழகத்தில் பாலிசிதாராராக இருப்பாயாகில் நிச்சயமாக நீ ஒரு அவிசுவாசியே / பாவனைவிசுவாசியே. அது 100 சதவீதம் உறுதி.

46, இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். (எபி. 13:8). சகோதரரே, நான் ஆயுள்காப்பீடு குறித்து சுருக்கமாய் உங்களுக்கு எழுதின இந்த புத்திமதியான வார்த்தைகளை நீங்கள் பொறுமையாய் ஏற்றுக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். 2008 ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் ஆயுள் காப்பீட்டுக்கழகத்தில் பாலிசிதாரராக சேருங்கள். உலகத்தின் முடிவு பரியந்தம் அது உங்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. அதில் பாலிசிதாரராக சேர நீங்கள் செய்ய வேண்டியது ஒரே ஒரு காரியம் மாத்திரமே. அதாவது நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் பரிசுத்த ஆவியை பெற்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில், அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸதுவின் சரீரமாகிய சபையில் அவயவமாகுவீர்கள். அதாவது அவருடைய ஜீவனில், நித்திய ஜீவனில் பங்குபெறுவீர்கள். இதுவே உங்களுக்கு நித்திய பாதுகாப்பு.

47,

காப்பார் உன்னைக் காப்பார், காத்தவர்
காப்பார், இன்னும் இனிமேலும் காத்திடுவார்
கலங்காதே மனமே - காத்திடுவார்

கண்டுன்னை அழைத்தவர் கரமதைப்பார்
அவர் கைவிடாதிருப்பார்
ஆண்டுகள் தோறும் உனக்கவர் அளித்த
ஆசிகளை எண்ணிப்பார்
எண்ணிப்பார், எண்ணிப்பார், எண்ணிப்பார்
என்றுமதை எண்ணிப்பார்

48, கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே இந்த புதிய ஆண்டு 2008 முழுவதும் கர்த்தருடைய தயவினாலே திருப்தியடைந்து, கர்த்தருடைய ஆசீர்வாதத்தினாலே நிறைந்திருப்பீர்களாக. ஆமென். கிருபையானது உங்கள் அனைவரோடுங் கூடஇருப்பதாக. ஆமென்
ஜனவரி / 2008,

கிறிஸ்துவின் அன்பில்,
*சகோ.காலேப் யோசுவா*

## *தங்கள் வாயினாலே இன்பமாய்ப் பேசுகிறார்கள்.*
## *அவர்கள் இருதயமோ பணஆசையைப் பற்றிப்போகிறது.*

1, நான் கடந்த 11/2 ஆண்டு காலமாக சென்னை, பல்லாவரம், J.M DTP கணினி மையத்தில் எனது தட்டச்சுப் பணிகளை செய்து வந்தது உங்கள் அனைவருக்கும் நன்குத்தெரியும். இதன் முதலாளி அம்மா மிக்க அனுபவமுள்ள திறமைசாலி, புத்திசாலி, குணசாலி மற்றும் கடின உழைப்பாளி. என்னை பொறுத்தளவில் பூவிருந்தவல்லி முதல் தாம்பரம் வரை DTP பணியில் அவர்களை மேற்கொள்வது கடினம். இதனால் மனமேட்டிமை உண்டு. எனது செய்தித்தொகுப்பு கணினித்தட்டச்சு பணிகளுக்காக அவர்களுக்கு நான் கொடுத்த கட்டணம் பிற கணினி மையத்தின் கட்டணத்தைவிட எவ்விதத்திலும் குறைவானது இல்லை. மாறாக ஒரு நியாயமான கட்டணமாகவே அது இருந்தது. ஆனாலும் எனக்கு முந்தியும், எனக்குப் பிந்தியும், வந்தவர்களின் பணிகளை முடித்தபின்பு தான் எனது பணிகளை தொடங்குவார்கள். முடித்துக்கொடுப்பார்கள். அதாவது எனது பணிகளுக்கு எப்பொழுதுமே பின்னுரிமைதான். இதனால் எனது பணிகள் எப்பொழுதமே நான் நினைக்கும் நேரத்தில் முடிவடைவது கிடையாது. ஆனால் மேடம் என்னிடம் அன்புடனும், பண்புடனும் பழகி வந்தார்கள். ஆதலால் எனது பணிகளின் காலதாமத்தை என்றுமே நான் பொருட்படுத்தியது கிடையாது. மாறாக அவர்களுக்கு அனைத்து வழிகளிலும் எனது ஒத்தாசைகளை கொடுத்தே வந்தேன். நான் மையத்தில் அடிக்கடி காணப்படுவதை கண்டு பிறர் என்னை குறித்து அவர்களிடம் விசாரிக்கும் போது ***இவர் என் நண்பர்*** என்றே கூறுவார்கள். தன் மையத்திற்கு வரும் எந்த ஒரு வாடிக்கையாளரையும் தன் இல்லத்திற்கு அழைத்ததில்லை. மாறாக என்னை மட்டும் தன் இல்லத்திற்கு அழைத்து சென்று, உபசரித்து, குடும்பத்தில் அனைவருடனும் பழகும் ஒரு சூழ்நிலையை உருவாக்கி கொடுத்தார்கள். மையத்திற்கு வரும் அனைவரும் இவர்களை மேடம் என்றே அழைப்பார்கள். ஆனால் நான் மட்டும் உரிமையோடு அவர்கள் பெயரை சொல்லித் தான் அழைப்பேன். ஆனாலும் நஞ்சையும், எட்டியையும் முளைப்பிக்கிற வேருக்கு தன் இருதயத்தில் இடம் கொடுத்ததால் பிற்காலத்தில் ஒரு வாடிக்கையாளருக்கு கிடைக்கும் மரியாதை கூட எனக்கு கிடைக்காமல் போய்விட்டது. அந்த நிலைக்கு அவர்கள் என்னை தள்ளினார்கள், நானோ நண்பனாக அவர்களுக்கு நன்மையையே செய்து வந்தேன். இந்நிலையில் நான் வெளியே செல்ல முயற்சித்தேன். ஆனால் அம்மா முகத்தில் பிரகாசமில்லை. அவர்களுடைய முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் பிந்தின நற்குணம் என்னிடத்தில் உத்தமமாக இல்லாவிட்டாலும் என் முடிவை மாற்றி மீண்டும் J.M DTP யோடு என்னை இணைத்துக்கொண்டேன்.

2, எனது தட்டச்சுப் பணிகள் நடந்துகொண்டிருக்கும்போதே அம்மா அதன் சாராம்சத்தை கிரகித்து, அதனால் தன் இருதயத்தில் குத்தப்பட்டு, தனது குறைகளை சீர்தூக்கிப் பார்த்து தன் தவறுகளை அவ்வப்போது அவர்கள் திருத்திக்கொள்ளவது உண்டு. முதலாளி அம்மா தன் தாயாரிடம் நீங்கள் தான் பெந்தெகொஸ்தே அனுபவத்துக்குள் வரவில்லை, எங்களையாவது அந்த அனுபவத்திற்குள் வர மற்றும் வளரவிடுங்கள் என்று கூறிய நாட்களும் உண்டு. மேடத்தையும் மையத்தில் பணிபுரியும் மற்றொரு ஸ்திரீயும், மையத்திற்கு வந்து செல்லும் மற்றொரு பெண்ணையும், மேலும் ஒரு சகோதரனையும் அவருடைய மனைவியையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தண்ணீர்

ஞானஸ்நானத்திற்குள் வழிநடத்தி வந்தேன். மேடம் கொஞ்சம் தயங்கினார்கள். ஆனால் பணிபுரியும் ஸ்திரீ ஆயத்தமானார்கள். மூன்றாவது பெண் மற்றும் அந்த சகோதரனும் அவரது மனைவியும் ஆர்வம் காட்டினார்கள். கர்த்தர் இவர்கள் மேல் கிருபையாக இறங்கி இரட்சிப்பின் சந்தோஷத்தை இவர்கள் உள்ளத்தில், வாழ்க்கையில் கொடுப்பாராக. ஆமென்.

3, முதலாளி அம்மா என்னிடம் மிக்க அந்நியோந்நியமாக பழகி வருவதை கண்ட நம்முடைய சகோதரர்களில் ஒருவர் : சகோதரரே , மேடம் உங்களிடம் எவ்வளவு தான் அந்நியோந்நியமாகப் பழகினாலும் முதலில் தனக்கு எந்த பணியில் அதிக லாபம் வரும் என்பதை அறிந்து, அந்த பணியையே முதலில் செய்து முடிப்பார்கள். உங்கள் பணியை தட்டிக்கழித்துக்கொண்டே போவார்கள். இவரிடம் நன்கு பழகுகிறோம். இவர் பணி தேவனுடைய பணியாகயிருப்பதினால் அதற்கு முன்னுரிமை கொடுத்து முதலில் முடித்துக் கொடுக்கவேண்டும் என்று நினைக்கமாட்டார்கள். இவர்களுக்கு பணம் தான் முக்கியம். பின்பு தான் நட்பு, தேவனுடைய வார்த்தை, தேவனுக்கு பணி என்றார். நட்பு என்பது தொழிலில் ஒரு நாடகமே என கூறி என்னை கடிந்துகொண்ட நாட்கள் உண்டு. நானோ அந்த அம்மாவை ஞானஸ்நானத்திற்குள் வழி நடத்துவதையே எனது குறிக்கோளாக கொண்டிருந்தேன், அவர்கள் சத்தியத்தை அறிகிற அறிவில் காட்டிய ஆர்வம் என்னை அவர்கள் பக்கம் கவர்ந்தது. ஆதலால் அம்மாவையும், மற்ற நான்கு பேரையும் எப்படியாவது சத்தியத்திற்கு கீழ்ப்படிய வைக்க வேண்டும் என்ற ஆர்வத்திலே அவர்களுக்கு தொண்டு செய்தேன்.

4, ஆனால் காலப்போக்கில், மேடம் இருதயத்தில் பணஆசை மிகவும் வேருகொண்டு இருப்பதை என்னால் காண முடிந்தது. இவர்களுக்கு வலது, இடது கைகளாக இருந்து உண்மையும் உத்தமமுமாக உழைத்துக் கொடுத்த இரு வாலிபப்பிள்ளைகள் தங்கள் பணிகளை விட்டு விலகினார்கள். அவர்களை எத்தனையே முறை கெஞ்சி, கூத்தாடி திரும்ப அழைத்தும் அவர்கள் வரமறுத்துவிட்டார்கள். காரணம் : மையத்தின் வரவு செலவு கணக்குகள் அவர்களுக்கு நன்கு தெரியும். அவர்கள் உழைப்பின் பலன் அதிலிருந்து அவர்களுக்கு போதுமானதாக கிடைக்கவில்லை என்பதே அவர்கள் மனப்பாரமாகயிருந்தது. அவர்களுக்கு மையவருமானத்திற்கு ஏற்றப்படி ஒரு சம்பளம் மற்றும் இதர சலுகைகள் கொடுத்திருந்தால் அவர்கள் விலகியிருக்கவேமாட்டார்கள்.

5, அடுத்து ஒரு முறை நமது சகோதரர்களில் இருவர் என்னோடு பேசிக்கொண்டே மையத்திற்கு வந்தார்கள். மையம் வந்தவுடன் நான் எனது பேப்பர்களை மையத்தில் வைத்துவிட்டு, மையத்திற்கு வெளிவந்து நின்று, வாசல் முகப்பில் அல்ல, சற்று விலகி நின்று பேசிக்கொண்டிருந்தோம். உடனே அங்கு நின்று பேசக்கூடாது என முதலாளி அம்மா கேட்டுக்கொண்டார்கள்,. அது அந்த வேளையில் எங்களுக்கு பெருத்த அவமானமாய் போய்விட்டது. மாடியிலிருந்து யாரோ எங்களை கழுத்தைப்பிடித்து கீழே தள்ளுவது போன்று எங்களுக்கு தோன்றியது. பின்பு நான் மேடத்திடம் அவர்கள் செய்த காரியம் தவறு என்று கூற, அவர்கள் கூறியதாவது : நீங்கள் மூவரும் வெளியே நின்று பேசிக்கொண்டிருப்பதை பிறர் பார்த்து, மையத்தில் கூட்டம் அதிகமாயிருக்கிறது, ஆதலால் வாடிக்கையாளர்கள் வெளியே நின்று பேசிக்கொண்டிருக்கிறார்கள், ஆதலால் நாம் மற்றொரு மையத்திற்கு செல்லுவோம் என்று யூகித்து சென்று விடுவார்கள். ஆதலால் எனது தொழில் பாதிக்கப்படும் என்றார்கள். இது எல்லாம் என்ன? நிச்சயமாக பணஆசை தான். இதுகுறித்து நான் கடந்த இதழில் நாசுக்காக எழுதியிருந்தேன்.

6, அடுத்து நெருக்கமாக பழகிவந்த என்னிடம், நண்பர் என்று அழைத்து வந்த என்னிடமே அதிக கட்டணம் வசூல் பண்ண ஆரம்பித்தார்கள். இங்கு தான் பிரச்சனையே உருவாகியது. நான் எனது செய்தித்தொகுப்புகளை ஜெராக்ஸ் எடுக்கும் மற்றொரு கணினி மையத்தில் சி.டி.யிலிருந்து எடுக்கும் பிரிண்ட் அவுட்டுகளுக்கு ஒரு பக்கத்திற்கு ரூ1/- கட்டணம். அதாவது முதல் 10 பக்கங்களுக்கு ரூ 2/- பின் பக்கம் ஒன்றுக்கு ரூ 1/- மட்டுமே. கடந்த செய்தித்தொகுப்பில் இரண்டாவது பிரிண்ட் அவுட் எனக்கு அத்தியாவசியமாக தேவைப்பட்டது. பொதுவாக நான் இரண்டாவது பிரிண்ட் அவுட்டை மேடத்திடம் எடுப்பதில்லை. தேவைப்பட்டால் எனது இரண்டாவது மகன் எனக்கு அதை இலவசமாகவே எடுத்துக்கொடுப்பான். ஆனால் இந்த முறை மேடத்திடம் எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதற்கு என்னிடம் ஒருபக்கத்திற்கு ரூ 4/- கட்டணமாக வசூல் செய்தார்கள். நான் எதுவும் பேசாமல், ஆனால் என் மனம் திருப்தியற்ற நிலையில் அவர்கள் கேட்டதை கொடுத்துவிட்டு மனமடிவுடன் வெளியே வந்துவிட்டேன்.

7, எனது வீட்டிற்கு வந்த பிறகு சில அறிமுகமான மையங்களுக்கு போன் செய்து, இதன் கட்டணம் குறித்து மேலும் விசாரித்தேன், அனைவரும் ரூ 2/- க்கு உட்பட்டே கூறினார்கள். இன்று நான் தட்டச்சு செய்யும் மையத்தில் கூட ரூ 2/- தான். மேலும் பத்து பிரிண்ட்அவுட்க்கு மேல் எடுக்கும் சமயத்தில் ரூ1/- மட்டுமே கட்டணம். ஆதலால் மறுமுறை கணினி மையம் சென்றவுடன் அம்மாவிடம் பாருங்கள் நான் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக உங்களுடன் நன்கு பழகிவருகிறேன். உங்கள் மையத்தில் எனது தட்டச்சுப் பணிகளை செய்து வருகிறேன். இப்படியிருக்க பிறர் ரூ 2/- முதல் 1/- வரை கட்டணமாக வசூல் செய்யும் பிரிண்ட்அவுட்களுக்கு நீங்கள் என்னிடம் ரூ 4/- கட்டணமாக வசூல் செய்தது என்ன? இது நியாம்தானா என்று கேட்டேன். பாருங்கள் நான் கர்த்தருடைய பணத்தை ஏனோ தானோ என்று செலவு செய்ய முடியாது, கூடாது. நான் செலவு செய்யும் ஒவ்வொரு பைசாவிற்கும் கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும். அம்மாவின் கணினி மையத்திற்கு ஸ்தாபன ஊழியர்கள் நிறைய வருகின்றனர். மேடம் கேட்டதை அவர்கள் கொடுத்துவிட்டு செல்லாம். ஏனென்றால் அது பொதுமக்களின் பணம். அதை அவர்கள் ஏனோ தானோ என்று செலவு செய்து கள்ள கணக்கு எழுதலாம். நான் அப்படி செய்ய முடியாது. மேடம் என்னுடைய கேள்விக்கு பதிலாக: உங்களிடம் பழகி வந்த காரணத்திற்காக ஒசியில் பிரிண்ட்அவுட்டு எடுத்துக்கொடுக்க முடியுமா என கூறி ரூ.4/- கட்டணமாக வசூலித்ததை நியாயப்படுத்தினார்கள். பாருங்கள் அவர்கள் வாயின் தாறுமாறுகள், உதடுகளின் மாறுபாடுகள் எவ்வளவு கடுமையானது, கொடிதானது என்று. உடனே கணினி மையத்தை விட்டு நான் வெளியேறினேன். இரும்பை இரும்பு கருக்கிடுவது போன்று அம்மா தன் சிநேகிதனுடைய முகத்தை கருக்கிட்டார்கள். இதோடு மட்டுமா? மேலும் எனது தட்டச்சுப் பணிகளுக்கு இனி அதிக கட்டணம் வசூல் செய்யப் போவதாகவும் கூறினார்கள். மேடம் கொடுத்த போஜனத்தை எவ்வாறு எனது வாய் ருசிபார்த்ததோ, அவர்கள் காட்டிய அன்பினால் என் இருதயம் எவ்வாறு பூரிப்படைந்ததோ : அதே போன்று அவர்கள் சொல்லிய வார்த்தைகளை எனது

செவிகள் சோதித்துப்பார்த்து, அது எனக்கு யூதாஸ் இயேசுவுக்கு கொடுத்த முத்தம் போன்று தோன்றினது, என் ஆத்துமா எனக்குள் மிகவும் விசனப்பட்டது. அன்று எனக்கு புத்திசொன்ன அந்த சகோதரனை நினைவு கூர்ந்தேன். நானோ அன்று என் நாவினால் பாவம் செய்யாதபடிக்கு என் வாயை கடிவாளத்தினாலே அடக்கிக்கொண்டு, ஒரு புது அனுபவத்துடன, பண ஆசை என்ற கேடான சிந்தையிடமிருந்து என்னை விடுவித்துக்கொண்டேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். மேடத்தை அவர்களுடைய இருதய கடினத்திற்கு விட்டுவிட்டேன். தேவன் நீதியுள்ள நியாயாதிபதி. என் மனைவி, மக்கள் மேடத்தை முகமாக காணவிட்டாலும், நான் அவர்களை விட்டுவிலக அவர்கள் விரும்பவில்லை. அந்த அளவுக்கு தங்கள் உள்ளத்தில் அவர்களுக்கென்று ஒரு தனி மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். ஆனால் இன்று ?

8, இந்நாட்களில் எனது வீட்டின் அருகாமையில் உள்ள புரபஷனல் கிராப்பிக்ஸ் என்ற கணினி மையத்தில் எனது பணிகளை செய்து வருகிறேன். இதுவும் கொஞ்சம் சுருசுருப்பாய் உள்ள கணினி மையம் தான். ஆனாலும் இங்கு என் பணிகள் யாவும் ஏற்ற வேளையில் முடிவுப்பெற ஜெபித்துக்கொள்ளுங்கள் இங்கு எனக்காக தட்டச்சு செய்யும் பெண்மணியையும் உங்கள் ஜெபங்களில் நினைத்துக்கொள்ளுங்கள். என்னுடைய சகல பணிகளையும் செய்வதற்கு வேண்டிய ஞானமும், புத்தியும், அறிவும் அவர்களுக்கு உண்டாகவும் அவர்களை தேவன் தம்முடைய ஆவியினால் நிரப்பவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

9,இந்த நிலையில் J.M DTP மேடத்தையும் அங்கு எனக்கு அறிமுகமான இதர இரண்டு பெண்மணிகளையும், மேலும் அந்த சகோதரனையும் அவருடைய மனைவியையும் மறந்துவிடாதீர்கள். ஐந்து பேருக்கும் சத்தியம் போதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் சத்தியத்தை நன்கு அறிவார்கள். சத்தியம் அவர்களை ஏற்ற வேளையில் விடுதலையாக்கவேண்டும். நான் மேடத்தை அன்று போல் இன்றும் சத்தியத்தின்படி நேசிக்கிறேன். நான் முதலாளி அம்மா தன் கரங்களினால் சமைத்த சமையல்களை சுடச்சுட அவர்களோடு அமர்ந்து ருசித்து புசித்தவன். மையத்திற்கு அவர்கள் தனக்கென கொண்டு வரும் ஆகாரத்தை அவர்களோடு உட்கார்ந்து பகிர்ந்து புசித்தவன். அன்றைய அந்த அன்பை நான் மறக்க முடியுமா? அவர்கள் தான் எல்லா தீமைக்கும் வேராகிய பணஆசையினால் என்னை மறந்துபோனார்கள். என் சிநேகத்திற்கு பதிலாக என்னை பகைத்தார்கள். நானோ அவர்கள் ஆத்தும இரட்சிப்புக்காக ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கிறேன். கர்த்தர் அவர்களுக்கு தன் தவறை உணரத்தக்க இருதயத்தையும், அறிவை உணர்த்த தம்முடைய ஆவியையும் கொடுக்கவேண்டும். அதுதான் அது!.

10, துளிர்த்து, பூத்து, காய்த்து பின் ஒன்றரை ஆண்டுகளுக்கு பின் பணஆசையினால் காய்ந்து போன அந்த JM DTP அன்பையே என்னால் மறக்க முடியாது என்றால் :

அ) 10 ஆண்டுகளுக்கு பின் காய்ந்த அந்த மூங்கில் ஏரி அன்பை என்னால் எப்படி மறக்கமுடியும்? ஒரே மேஜையில் அமர்ந்து புசித்து, ஊழிய, குடும்பகாரியங்களை மனம் விட்டு பகிர்ந்துக்கொண்ட நாட்கள் கணக்கில் அடங்காது. பின் ஏன் அந்த மனமுறிவு? உங்களுக்கு அறிமுகப்படுத்த உங்கள் வீட்டிற்கு நான் கூட்டிக்கொண்டு வந்த சகோதரனிடம் நீங்கள் என்னை, நான் ஒரு ஜாதி பாகுபாடு பார்ப்பவன் என்று அவருக்கு அறிமுகப்படுத்தி, அதை குறித்து அதிகமாக விமர்சித்ததினால் வந்த விளைவு தானே? ஆனாலும் நான் உங்களை மறக்கவில்லை. நீங்கள் என்னை மறந்து போனீர்கள். ஆனாலும் இந்நாட்களில் பழைய அன்பு மீண்டும் துளிர்விடுவதை காண்கிறேன். கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

ஆ) ஓ! பொழிச்சலுரே நீ எங்கே போனாய்? உங்கள் அன்பு தான் என்ன? நான் உங்களை எப்படி மறப்பேன்? உங்கள் குடும்பத்துடன் நானும் ஒருவனாக உட்கார்ந்து பூசித்த நாட்கள் எத்தனை? பெண்கள் பொது ஸ்தலங்களில் பணிசெய்ய கூடாது, பொது ஸ்தாபனங்களில் பணிபுரியும் ஒருவர் ஐந்து வகை ஊழியத்தில் ஒன்றை வகிக்கக் கூடாது என நான் வேதவாக்கியங்களைக் கொண்டு,,இக்காலத்திற்குரிய செய்தியைக் கொண்டு பொதுவாக எழுதிவருவதினால் தானே ? வீட்டு உறவு முறிந்தாலும், ரோட்டில் கண்ட இடத்தில் நீங்கள் என்னோடு அன்பு பாராட்டிக்கொள்ளுகிறீர்களே அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

இ) எனக்கு மதிப்பும், மரியாதையும் கொடுத்து போஜன மேஜைக்கு அழைத்து ஆகாரம் சாப்பிட்டு கொண்டிருக்கும் வேளையிலேயே அங்கு எனது தலைக்குமேல் கத்தியை தொங்கவிட்ட பெரவலூரே நான் உங்களையும் எப்படி மறப்பேன்? உங்கள் அன்பு யூதாசின் அன்பாக இருந்தாலும் நீங்கள் இன்னும் எனக்கு நண்பர் தான் ! உங்களிடம் எனக்கு என்ன? உபதேசங்களில் வந்த பிரிவினை தானே ! அது ஒரு நாளும் எனது நட்பை பாதிக்காது. நீங்கள் என்னை வெறுக்கிறீர்கள், நானோ உங்களை நேசிக்கிறேன். உங்களுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம் அதுதான்.

ஈ) உன் வீட்டிற்கு வந்த என்னை உள்ளே வராதே எனக்கூறி வெளியே நிறுத்தி, உங்களுக்கும் எனக்கும் ஐக்கியமில்லை என்று கூறிய பல்லாவரம் பாஸ்டரே உங்களையும் நான் நேசிக்கிறேன். கர்த்தருக்குரிய தசமபாகத்தில் கொள்ளை மற்றும் மாய்மாலம், உபதேசங்களில் பச்சோந்தி வேஷம், இதை நான் கண்டித்ததினால் வந்த கோபமோ ? நான் சத்துருவையும் நேசிக்கிறவன். ஆதலால் என் இருதயத்தில் இன்றும் நண்பராக நீங்கள் இருக்கிறீர்கள்.

உ) வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசு கிறிஸ்துவின் தூதன் சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் என்கிற உங்கள் உபதேசத்தை நான் மறுத்ததினால் இனி என் வீட்டிற்கு வராதே என்று கூறிய ஏல்பெத்தேலே நான் உங்களையும் மறக்கவில்லை. நான் அன்று போல் இன்றும் உங்களை நேசிக்கிறேன் நான் உங்களை முகமுகமாக இந்நாட்களில் காணமுடியாவிட்டாலும், என் உள்ளத்தில் நீங்கள் உண்டு. உங்கள் வயதிற்கு நான் மரியாதைக்கொடுக்காமல் இருக்க முடியுமா? நீங்கள் எனக்கு மூத்தவராயிற்றே !

ஊ) நான் கோவை வரும் சமயம் என்னை வீட்டில் தங்கவைத்து, பராமரித்து, வழி அனுப்பும் ரெட்டியார் காலனி பிள்ளைகளே உங்களை தான் நான் மறக்கமுடியுமா? நீங்கள் என்னை மறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டது. எனக்கு பதிலாக புதிய நண்பர்களைத் தெரிந்துக்கொண்டீர்கள். நல்லது. என்னை புறம்பே தள்ளினாலும், நீங்கள் என் உள்ளத்தில் குடிக்கொண்டிருக்கிறீர்கள். ஆரம்ப நாட்களில் என் மீது மிக்க அன்பு பாராட்டி, முடிவில் என் மீது பொய் வழக்குப்போட்டு, கோவை நீதிமன்றத்திற்கு அழைத்த உங்கள் சகோதரனையும் நான் இன்றும் நேசிக்கிறேன். என் உள்ளத்தில் எள் அளவு கூட கசப்பு கிடையாது, இருக்காது.

11, இவ்வாறாக என் மீது அன்பு பாராட்டி நேசித்த உள்ளங்கள் இந்நாட்களில் என்னை விட்டு பிரிந்துசென்றது என் உள்ளத்தில் ஒரு பாரமாக இருந்து வருகிறது. நீங்கள் என்னை மறந்தாலும், என்னை விட்டுப்பிரிந்தாலும் நீங்கள் அனைவரும் என் நினைவில் இருக்கிறீர்கள். உங்கள் பிரிவினைகளால் உண்டான இருதயத்தின் நினைவுகள் மிகுதி. மனோவிசாரங்கள் மிகுதி. சத்துருக்களையும் மன்னித்து சிநேகிக்கும் மனப்பக்குவம் கொண்டவன் நான். பாருங்கள் என் அன்பு சகலத்தையும் தாங்கும், என் அன்பு சகலத்தையும் சகிக்கும். மேலும் என் அன்பு ஒருக்காலும் ஒழியாது. ஏனென்றால் நான் இயேசுவை நேசிக்கிறேன்.

12, துளிர்த்து, பூத்து, காய்த்த அன்பு ஏன் காய்ந்தது? அதற்குள் தேவனுடைய ஆவியில்லை. அது மீண்டும் துளிர்த்து, பூத்து, காய்க்க வாய்ப்பு உண்டா? ஏன் இல்லை ? இந்த எலும்புகள் உயிரடையுமா ? நிச்சயமாக அடையும். எப்பொழுது? கர்த்தர் இவர்களுக்குள் பரிசுத்த ஆவியை பிரவேசிக்க பண்ணினால், அப்பொழுது உயிரடைவார்கள். ஆம் அவர்களுக்குள் பரிசுத்த ஆவி பிரவேசித்தால் அவர்களிடத்தில் காய்ந்த அந்த அன்பு மீண்டும் துளிர்த்து, பூத்து, காய்க்கும். ஆம், அப்படியே ஆகக்கடவது. அல்லேலூயா !

13, நண்பர் என கூறிக்கொண்டு ரூ 58/- க்கு பதிலாக ரூ 152/- என்னிடம் வசூல் செய்த J.M DTP அன்பையே மறக்கமுடியவில்லை என்றால் :

அ) சகோதரனே ரூ200/- வேண்டுமென்று கேட்க ரூ 500/- வைத்துக்கொள்ளுங்கள் என்று கொடுக்கும் மனப்பாக்கமே உங்கள் அன்பைதான் மறக்கமுடியுமா? நம் நட்பு துளிர்த்து, பூத்து, காய்த்து, கனிக்கொடுத்து வருவது குறித்து மிக்க மகிழ்ச்சி.

ஆ) ஆயிரக்கணக்கானோர் இந்த செய்தித்தொகுப்பை படிக்கிறார்கள். ஆத்துமாவுக்கு பிரயோஜனமாயிருக்கிறது என சாட்சிச் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களில் ஊழியத்தை தாங்க முன் வருவோர் எத்தனை பேர்? ஒரிருவர்களே! ஏன் ? கிறிஸ்துவின் மனவாட்டியை காண்பது அரிதாகயிருக்கிறது. தான் கேட்காமலே, கர்த்தர் எனக்கு கொடுத்த ஊழியத்தை தாங்க, தானாகவே ரூ10,000/- முன் வந்து கொடுத்த, மேலும் என்னை தாங்குவேன் என உற்சாகப்படுத்தும் தேங்காய்பட்டிணமே ஏழ்மைநிலையிலும் ஊழியத்திற்கான உன் பாரம், உன் தாகம், உன் வாஞ்சை, உன் அன்பு தான் என்ன? இந்த குட்டி இருதயத்திற்குள் நீ குடிக்கொண்டிருக்கிறாய் என்பதை மறந்துவிடாதே.

இ) என்னுடைய பாடுகளின் வேளைகளில் 10, 15,20 ஆயிரங்கள் என லட்சத்திற்கும் மேல் கொடுத்து உதவிய நுங்கம்பாக்கமே நீ ஏன் என்னை மறந்தாய்? நான் உங்களை கடிந்துக்கொள்கிறதினால் தானே? தான் பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலுக்கு செவிக்கொடுக்கிறதை பார்க்கிலும் உங்கள் பண உதவிகளுக்கு செவிக்கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்து பாருங்கள். கடிந்துக்கொள்ளுதலை உங்கள் மனம் வெறுக்கிறது ஏன்? நான் சத்தியத்தின்படி உங்களை நேசித்தேனேயல்லாமல் நீங்கள் கொடுத்த பண உதவிகளுக்காக அல்ல. நீங்கள் எனக்கு செய்த உதவிகள் தேவனுக்கு செய்த உதவிகள் ஆகும். நீங்களும் என் உள்ளத்தில் நீங்கா ஒரு இடத்தை பிடித்துள்ளீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

ஈ) கேரளத்து புங்கந்துறையே நீர் எங்கே ஒழித்துக்கொண்டீர்? என்னை உபசரிப்பதில் நீர் மன்னன் அல்லவா! கேரளத்தின் விளைச்சல்களை நான் என் குடும்பத்துடன் உங்கள் வீட்டில் புசித்தவன் அல்லவா ! இப்பொழுது இங்கு என் குடும்பம் நலம். உங்கள் குடும்ப நலம் அறிய ஆவா. உங்களை நேரில் சந்திக்கும் நாளை எதிர்நோக்கியுள்ளேன். நீங்கள் கறவை மாட்டின் தலைமீற்றை வளர்த்து, அதை விற்று, அந்த பணத்தை வர 15 மணி, போக 15 மணி, ஆக 30 மணி பிரயாணத்தை பொட்டுபடுத்தாது என்னிடம் கொண்டு வந்துக் கொடுத்து என் ஊழியத்தை தாங்கிய அந்த நாட்களையும், உங்கள் அன்பையும் மறக்கமுடியுமா? இது 15 ஆண்டுகள் ஆகியும் நேற்று நடந்த சம்பவம் போல் என் இருதயத்தில் உள்ளதே!

உ) உங்கள் சகோதரர்களின் காரியங்கள் யாவும் தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் மாறாக இருந்து வருகிறது. இப்படியிருக்க நான் அவர்களை நேசிப்பதினால் கடிந்துக்கொள்ளுகிறேன். நான் அவர்களை கடிந்துக்கொள்ளுவதற்காக அமெரிக்கா வாழ் நுங்கம்பாக்கமே நீங்கள் என்னை பகைக்கலாமா? நீங்கள் என் உள்ளத்தில் இருக்க, நான் ஏன் உங்கள் உள்ளத்தில் இல்லை? நீங்களும் எனக்கு உதவிகள் செய்தது உண்டே. இப்படியிருக்க நான் உங்களை மறக்க முடியுமா? முடியாது.

ஊ) 2008 ஜனவரி 7 மற்றும் 17 தேதிகளில் நெருங்கி வந்த தூளைமேட்டார் 20ஆம் தேதி பின்வாங்கியது என்ன? நீர் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டீர் என்று உம் பேரில் எனக்கு குறை உண்டு.

14,இவர்களை போன்று என் ஊழியத்தின் பாதையில் என் மீது அன்பு பாராட்டின உள்ளங்கள் அநேகம் ஆங்காங்கு உண்டு. உங்களில் ஒருவரையும் நான் மறக்க முடியாது. உங்கள் நினைவுகள் என் உள்ளத்தில் எப்பொழுதும் இருந்துகொண்டே இருக்கும். நான் இடைவிடாமல் உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறதை குறித்து என் ஆவியோடு நான் சேவிக்கிற தேவன் எனக்கு சாட்சியாயிருக்கிறார். நான் உங்களை மறப்பேனாகில் எனது வலதுகை தன் பணியை மறக்கும். பிரியமானவர்களே உங்கள் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உங்கள் அரமனைக்குள்ளே சுகமும் என்றென்றைக்கும் நிலைத்திருப்பதாக. பாருங்கள், இந்த ஆண்டு முழுவதும் நம் உள்ளத்தில் அன்பு பொங்கிப்பொங்கி வழியட்டும். ஊற்றுத் தண்ணீராகிய தேவ ஆவி, ஜீவநதியாய் நம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலிருந்து பாயட்டும். கர்த்தர் இந்த புதிய 2008 ம் ஆண்டில் உங்களை பூரண வடிவுள்ள தமது பரம வாசஸ்கலமாகிய சீயோனிலிருந்து ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

15,நான் இந்த சம்பவத்தை இங்கு எழுதியதின் நோக்கம் என்னவென்றால் : பணஆசைக்கு விலகியிருங்கள். அதுதான் புருஷனையும் மனைவியும், பெற்றோரையும் பிள்ளைகளையும், சகோதர சகோதரிகளையும், நண்பர்களையும் வேறு பிரிக்கிறது. அதுதான் எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. பாருங்கள் JM DTP யிருந்து என் பிரிவுக்கு பணஆசையே காரணம். தேவனுடைய வார்த்தை இவ்வண்ணமாக கூறுகிறது : கடைசி நாட்களின் கொடிய காலங்களில் மனுஷர் பணப்பிரியராய் இருப்பார்கள். நல்லோரை பகைக்கிறவர்களுமாயிருப்பார்கள். தியானியுங்கள் 2 தீமோ. 3:1-5. ஆதலால் நீங்கள் யாராக இருந்தாலும் சரி, பணஆசையை விட்டுவிலகுங்கள். முதலாவது தேவனுடைய

இராஜ்யத்தை தேடுங்கள். உங்கள் தேவைகளை கர்த்தர் அறிவார். அவர் உங்கள் தேவைகளை சந்திக்கிறவர். இயேசு உங்களை கைவிடார்.

16. காரியத்தின் கடைத்தொகையைக் கேட்பீர்களாக : இந்த புதிய ஆண்டில் பணஆசை பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படக் கூடாதப்படி உங்களை காத்துக்கொள்ளுங்கள். பணஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது : சிலர் அதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கிறார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே, தேவனுடைய மகளே, இவைகளை விட்டோடி நீதியையும், தேவபக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையும், சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. விசுவாசத்தில் நல்ல போராட்டத்தை போராடு, நித்திய ஜீவனைபற்றிக் கொள் : அதற்காகவே நீ அழைக்கப்பட்டிருக்கிறாய். அடுத்து சுத்த இருதயத்தோடே ஒருவரில் ஒருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள். கிருபையானது உங்களோடு கூட இந்த ஆண்டு முழுவதும் மட்டுமல்ல என்றென்றைக்கும் சதா காலங்களிலும் இருப்பதாக. ஆமென்.

*சகோ.காலேப் யோசுவா*

## *கர்த்தரைத் துதியுங்கள் : அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.*

1. எனக்கு சரியாக ஞாபகமில்லை. ஆனால் அது சுமார் 14 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம் என நினைக்கிறேன். நான் தவறாகவும் இருக்கலாம். திருவைகுண்டத்திலிருந்து அன்று காலை திருச்சி வந்து, பின் சில சகோதர்களோடு. 73 முதிர் வயதான ஒரு பெரியவரை சந்திக்க உரையூர் சென்றேன். அவர் தமிழை விட ஆங்கிலம் நன்கு பேசக்கூடியவர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானத்திற்கு அடுத்த பல கேள்விகள் கேட்டார். பெரியவருக்கு சிறியவன் விளக்கம் கொடுத்தேன். முடிவில் கர்த்தர் அவர் உள்ளத்தில் விசுவாசத்தை தொடங்கினார். பெரியவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள ஆயத்தம் ஆனார். அது மழைக்காலம். அவரை திருச்சி, காவேரி ஆற்றிற்கு அழைத்துச்சென்று அங்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். மாலை 4 மணிக்கு அவரை ஆயத்தமாக இருக்க கேட்டுக்கொண்டு நாங்கள் சென்றோம்.

2. மாலை 4 மணிக்கு பெரியவர் ஆயத்தமாகயிருந்தார். ஆனால் சிறியவர்களோ ஆயத்தமாகயில்லை. சிறியவர்களுக்கு காலதாமதம் ஏற்பட்டது. சிறியவர்களான நாங்கள் பெரியவரது இல்லத்திற்கு சென்ற சமயம் மழை தூர ஆரம்பித்தது. 4 மணிக்கு இல்லாத தூரல் இப்பொழுது ஆரம்பித்தது. பெரியவர் வீட்டில் அனைவரும் விக்கிரக ஆராதனைக்காரர்கள். பெரியவர் மட்டுமே கிறிஸ்து தன்னுடைய பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசித்து ஸ்தாபன சபை முறைப்படி ஞானஸ்நானம் பெற்றவர். ஆனால் இப்பொழுது வேதவாக்கியங்களின்படி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தன் பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறவிருப்புகிறார். ஏனென்றால் வேதவாக்கியம் அப் .10 : 43. கீழ்க்கண்டவாறு கூறுகிறது : கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவர் நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான் அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்கிறவன், அவருடைய நாமத்தினால் தன் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறவேண்டும்.

3. பெரியவருக்கு ஞானஸ்நானம் கொடுக்க திருச்சி, உரையூரிலிருந்து காவேரி ஆற்றுக்கு கூட்டிச்செல்ல நாங்கள் ஆயத்தமானோம். மழைதூர ஆரம்பித்ததால், அவர் வீட்டார் மறுப்புத்தெரிவித்தனர். இந்த மழையில் அவரை எங்கு கூட்டிச்செல்லுகிறர்கள்? இந்த முதிர்வயதில், இந்த மழை நேரத்தில் அவரை கூட்டிச்செல்லதீர்கள் என தடுத்தனர். நான் ஆறுதலான வார்த்தைகளை அவர்களோடு பேசினேன். முடிவில் அவர்கள் அவரை கூட்டிச்செல்ல ஒப்புக்கொண்டனர். பெரியவரும் எந்தவிதமான முறுமுறுப்பும் இல்லாமல் ஆயத்தமானார்.

4. மழை தூரிக்கொண்டிருக்கும் வேளையில், கர்த்தரை முன்வைத்து, காவேரி ஆற்றிற்கு எங்கள் பயணத்தை தொடங்கினோம். ஆட்டோ நகர்ந்தது. மழைதூரல் நின்றது. மின்னல், மேகமந்தாரம் மேலும் இடிமுழக்கம். கர்த்தரை ஸ்தோத்தரித்தோம். அன்று இந்த சகோதரருடன் மற்றும் சிலருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியதிருந்தது. முடிவாக அனைவரும் காவேரி ஆற்றுக்குள் சென்றோம். அனைவருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தேன். அங்கே இரவு ஆனது. சூரியன் அஸ்தமித்தது. புதிதாக ஞானஸ்நானம் பெற்றவர்களுக்காக கர்த்தருடைய இராப்போஜனப்பந்தியை ஆற்றிலே ஆசரித்தோம். மேகமந்தாரம், இடி முழக்கம், மின்னல் இவைகளின் மத்தியில் ஒரு தூரல் கூட விழவில்லை.

5. முடிவாக கால்களை கழுவுதல் சடங்கு அனைத்தும் முடித்து, ஆற்றைவிட்டு வெளியே வந்தோம். நாங்கள் ஆற்றைவிட்டு வெளியே வந்தவுடன் கடும் மழை, அது சுமார் ஒரு மணி நேரத்திற்கு நீடித்தது. ஞானஸ்நான ஆராதனை முடியும் வரை மழை நின்றிருந்தது குறித்து பெரியவருக்கும் மற்றும் அனைவருக்கும் மிக்க மகிழ்ச்சி. மீண்டுமாக கர்த்தரை ஸ்தோத்தரித்தோம். இந்த சம்பவம் பெரியவருடைய விசுவாசத்தை மேலும் வர்த்திக்க செய்தது. பின் பெரியவரை அவர் இல்லத்தில் விட்டு விட்டு நாங்கள் எங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றோம்.

6. ஆம், இன்று அந்த பெரியவருக்கு வயது 87. கடந்த 14 ஆண்டுகளாக இக்காலத்திற்குரிய செய்தியை நன்கு தியானித்து வருகிறார். தனிமையான போராட்டம். தனிமையிலும் சோர்வு இல்லை. ஏனெனில் அவர் கர்த்தரை

நம்பியிருக்கிறார். நான் அவருக்கு இக்காலத்திற்குரிய செய்தியையும் மற்றும் எனது செய்தித்தொகுப்புகளையும் அவ்வப்போது அனுப்பி வருகிறேன். அவர் அவைகளை தியானித்து நான் சந்திக்கும் போது அதுகுறித்து தனது கருத்துக்களை கூறுவார். அன்று முதல் பிரதிமாதம் எனக்கு தனது ஒய்வு ஊதியத்திலிருந்து ரூ 100/- அனுப்பிக்கொண்டேயிருக்கிறார். பிரதிமாதம் 2 அல்லது 3 ஆம் தேதி ரூ 100/- மணியாடர் வந்து வீட்டு கதவைத்தட்டும். அந்த அளவிற்கு அவர் எல்லாவற்றிலும் நேர்மை.

7. ஆனாலும் அவரை மாதத்தில் ஒரு நாளாவது சென்று பார்த்து, ஆறுதலான வார்த்தைகளை பேசி வர, திருச்சியிலுள்ள நம்முடைய சகோதரர்களில், கிறிஸ்துவின் மணவாட்டிகளில் யாரும் முன்வரவில்லை. இது அந்தோ பரிதாபம்! இந்த மக்களை என்னவென்று சொல்லுவது? எல்லாம் பெயரளவில் தான் மணவாட்டி. ஆனால் கிரியை அவர்களிடத்தில் ஒன்றும் இல்லை.

8. பிரியமானவர்களே, மாமிசத்தின்படி இந்த 87 வயது சகோதரனுக்காக ஆனாலும் கிறிஸ்துவுக்குள் 14 வயதுடைய வாலிபனுக்காக ஜெபியுங்கள். உங்கள் ஜெபம் இவருக்கு ஆயுள் காலங்களை கூட்டிக்கொடுக்கட்டும். இவரும் புத்தியுள்ள, கற்புள்ள, கன்னிகையாக கிறிஸ்துவின் வருகைக்கு தன்னை ஆயத்தப்படுத்தட்டும். உங்கள் ஜெபம் அவர் வாழ்க்கையின் ஜெயமாக இருக்கட்டும். விக்கிரகாராதனைகாரர்களாகிய இருவருடைய குடும்பத்தினரையும் உங்கள் ஜெபங்களில் நினைக்க மறந்துவிடாதீர்கள்.

9. 2007, டிசம்பர் மாதம் சகோதரர் அனுப்பிய ரூ 100/- மணியாடரில் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார். *I am staying in the Message*. Kindly pray for my family and me. I am well. Age 87 – Completed. 88 is runing. என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்கியது. இந்த முதிர்வயதிலும் சகோதரர் சத்தியத்திலே நிலைத்திருக்கிறார் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை. சகோதரனுடைய முதிர் வயதில் அவரை தள்ளிவிடாமலும், அவருடைய பெலன் ஒடுங்கும் போது அவரை கைவிடாமலும் இருக்கும் என் தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் கேட்டுக்கொண்டபடி நீங்கள் அவருக்காக தினமும் ஜெபிப்பீர்களா? அவர் தேவனுடைய வார்த்தை விட்டு, இக்காலத்திற்குரிய செய்தியைவிட்டு, வலது, இடதுபுறம் சாயந்துவிடாதபடி, நேர்மையக்கோட்டில் நிலைத்து நிற்க நாம் ஜெபிப்போமா? உங்களுக்குள்ளும் மற்றயாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மை செய்ய நாடுங்கள்.

10. திருச்சியிலிருந்து மற்றொரு மூத்த சகோதரர் தனது 17.12.2007 கடிதத்தில் எனக்கு கீழ்க்கண்டவாறு எழுதுகிறார். கடந்த செய்தித்தொகுப்பை பெற்று, அதை படித்து பின் இந்த கடிதத்தை எழுதி இருக்கிறார். செய்தியை இன்று காலை 11 மணியளவில் பெற்று முதல் 3 பக்கங்கள் கடைசி பக்கத்தையும் வாசித்தேன். மேலும் வாசிப்பேன். உண்மையை வேதப்பகுதியிலிருந்து எடுத்துக்காட்டியிருக்கிறீர்கள். நன்றி. என்னை இன்னும் நினைத்து அன்புக்காட்டி செய்தி அனுப்பியிருக்கிறீர்கள். ஐயா, 89வது வயதின் நடுவில் நடந்துக்கொண்டிருக்கிறேன். கோலுன்றி நடக்கிறேன். ஞானஸ்நானம் மத். 28:19 ல் உள்ள வசனத்தையும் காண்கிறேன். சகோ.K.S.நித்தியனந்தம்.

11. பெரியவருடைய கடிதத்தில் உங்களுக்கு தேவையான பகுதிகளை மாத்திரம் எடுத்து எழுதியுள்ளேன். இவருடைய குடும்பத்திற்கும் நீண்ட காலமாக சத்தியத்தை விவரித்து எடுத்துக்கூறி வந்தேன். முடிவில் வீட்டில் ஒரு நாள் நான் பேசிக்கொண்டிருக்கும் போது மருமகள் ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்தார்கள். கிறிஸ்துவுக்குள் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் பெரியவரும், அவர்களது துணைவியாரும் மருமகள் ஞானஸ்நானத்திற்கு தடைசெய்தனர். அது அன்று சிறியவனாகிய எனக்கு மிக்க துக்கமாக இருந்தது.

12. பாருங்கள் ஒருவருக்கு வயது 87, அடுத்தவருக்கு வயது 88. இருவரும் முதியவர்கள், படித்தவர்கள், ஆங்கிலம் சரளமாக பேசக்கூடியவர்கள். ஆனால் ஒருவருடைய இருதயம் வேதவாக்கியங்களை அறிந்துக்கொள்ளும்படி, புரிந்துக்கொள்ளும்படி திறக்கப்பட்டுள்ளது. அடுத்தவரது இருதயம் இன்று மட்டும் அடைப்பட்டிருக்கிறது, கடினப்பட்டுள்ளது. இதுதான் அது ! புரிகிறதா? எது? கீழே வாசியுங்கள்.

13. கர்த்தர் இது குறித்து : தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது : புறம்பேயிருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமையாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் குணப்படாதப்படிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதப்படிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாவும், கேட்டும் உணரதவர்களாகவும் இருக்கும்படி இப்படிச் சொல்லப்படுகிறது என்கிறார். மாற் . 4: 11,12.

14. சகோ.நித்தியனந்தம் வீட்டில் நான் எத்தனையோ முறை மதிய ஆகாரம் சாப்பிட்டு இருக்கிறேன். அதற்கு நன்றிகடனாக இந்த குடும்பத்தின் ஆத்ம இரட்சிப்புக்கு எனது உள்ளத்தில் ஒரு பாரம் அன்று முதல் இன்று வரை இருந்து வருகிறது. நான் சத்தியத்தை ஏற்றுக்கொண்ட மற்றும் சத்தியத்தை புறக்கணிக்கும் பெரியவர்களையும் மிகவும் நேசிக்கிறேன். என்னுடைய அன்பு இருவரிடத்திலும் ஒரே மாதிரியாகவே காணப்படுகிறது. நீங்கள் சகோ.நித்தியனந்தத்தையும் அவரது குடும்பத்தினரையும் உங்கள் ஜெபங்களில் நினைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*சகோ. காலேப் யோசுவா*

# இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது

1. கர்த்தருடைய கிருபையினால் B.E படித்து, இன்னும் பல டிப்ளோமா கோர்ஸ்கள் முடித்து இந்நாட்களில் பணிபுரிந்து வரும் (Company: Food Processing MNC. Location:Zaheerabad. A.P. Category: Manager. Designation: Engineer Electronics & Instrumentation. Position: HOD- Electronics & Instrumentation Department) எங்கள் மூத்த மகன் ஜான்பாலுக்கு நாங்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக அவன் சரீரத்தின் பாகமாகிய அவனது ஏற்ற துணையை கண்டடைய கர்த்தரை எலியேசராக முன் வைத்து ஜெபித்து வந்தோம். சிலர் ஒரே தேவன், அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பதை மறுதலித்து, தேவத்துவத்தில் மூவர் உண்டு என சாதித்தனர். சிலர், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசித்தாலும் வேதவாக்கியங்களின்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தங்கள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் எடுக்க மறுத்தனர். சிலர் ஆபரணங்கள் அணியத்தான் செய்வோம் என்றனர். சிலர் திருமணத்திற்கு அடையாளமாக தாலி/ மோதிரம் எதுவும் அணிய மாட்டோம் என்றனர். சிலர் எங்கள் பெண் பொதுப்பணி ஸ்தலங்களில் பணிகள் புரியத்தான் செய்வார்கள் என்றனர். மேலும் பெண்கள் படித்து பட்டங்கள் பெற்றது எதற்கு என வாக்குவாதம் செய்தனர். சிலர் வேதவாக்கியங்களை பார்க்காதீர்கள், சமுதாயத்தின் நடைமுறைகளைப் பாருங்கள், நடைமுறைக்கு ஏற்றார்போல் அனுசரித்துப்போங்கள் என்றனர். சிலர் பெண்கள் வீட்டில் தான் திருமணம் நடைபெற வேண்டும். இது எங்களது நடைமுறை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் என்று வாக்குவாதம் செய்தனர். சிலர் பூ மாலைகள் அணியத்தான் செய்ய வேண்டும் அது இல்லாமல் ஒரு திருமணம், திருமணமாகாது என இகழ்ந்தனர், இப்படியாக ஏதாவது ஒரு காரியத்தில் ஒரு மனம் ஏற்படாமல் மனமுறிவு ஏற்பட்டது. ஆனாலும் கர்த்தருடைய வேளைக்கு பொருமையாக காத்திருந்தோம். கர்த்தருக்கு பயப்படுகிறவனுக்கு திட நம்பிக்கை உண்டு. அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும்.

2. கர்த்தர் அவருடைய அநாதி தீர்மானத்தின்படி, அவருடைய சித்தத்திலுள்ள வேளையில் காரியங்களை வாய்க்கச் செய்தார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். முடிவாக எங்களது உறவினர் வீட்டிலே பெண் இருந்தது குறித்து மிக்க மகிழ்ச்சியடைந்தோம். எனது உடன்பிறந்த மூத்த சகோதரரின் இளைய மகனுடைய மனைவியின் தங்கையே அந்த பெண். பெயர்: கிறிஸ்லி மிடியா Chrisly Midea.  2007, டிசம்பர் 16 மற்றும் 29 தேதிகளில் பெண் பார்க்கும் படலம் (Choosing a Bride) முடிந்தது. இது கிறிஸ்து தமது முதலாம் வருகையில் தம்முடைய மணவாட்டியை தமது சுயரத்தத்தினால் மீட்டுக்கொண்டு, அவளை தெரிந்துக் கொண்டு சென்றதற்கு ஒப்பாக உள்ளது. அடுத்து நிச்சயத்தார்த்தம் (Betrothal) மற்றும் திருமண விருந்து (Marriage Feast) உள்ளது. பெண்வீட்டார் வேலூரில் வசிக்கிறார்கள். பெண் பரா மருத்துவத்தில் (Para Medical) B.O.T படித்து அத்துடன் M.Sc., (Psychology) பட்டம் பெற்றுள்ளார். தற்போது M.O.T. (Master of Occupational Therapy) கர்நாடகத்திலுள்ள மணிப்பால் பல்கலைக்கழகத்தில் படிக்கிறார்கள். 2009 ஜுன் மாதம் படிப்பை முடிக்கிறார்கள். பெண்ணின் குடும்பத்தினர் தேவனுடைய வார்த்தைக்கு தங்களை முற்றிலுமாக ஒப்புக் கொடுப்பதோடு மட்டுமல்ல அதற்கு கீழ்ப்படிய ஆயத்தமாக இருப்பதாகவும் கூறினார்கள். அது எங்களுக்கு மிக்க மனநிறைவாக இருந்தது. நிச்சயத்தார்த்தம் மற்றும் திருமண விருந்திற்கான மாதங்கள் மார்ச் 24 மற்றும் ஜுலை என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மார்ச் 24ம் தேதி காலை பெண் வீட்டார் குடும்பத்தினருக்கு ஞானஸ்நான ஆராதனை. மதியம் நிச்சயத்தார்த்தம். இரவு கர்த்தருடைய இராப்போஜன பந்தி. இந்த திருமணக்காரியங்கள் யாவும் வேதவாக்கியங்களின் அடிப்படையில் நடைபெற தேவ ஆலோசனை, ஆவியானவரின் வழி நடத்துதல் அனைத்திற்கும் ஜெபித்துக்கொள்ளுங்கள். இந்த திருமண காரியங்களில் இக்காலத்திற்குரிய செய்தியிலுள்ள சில குடும்பத்தினருக்கும் எனது உறவினர் சிலருக்கும் நான் அவர்கள் வீட்டல் பெண் எடுக்கவில்லை என்பதில் என் மீது மனஸ்தாபம் இருக்கலாம். ஆனால் இந்தக்காரியம் கர்த்தரால் வந்தது, இதை நான் நன்கு அறிவேன். அதோடு மட்டுமல்ல இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ளவர்களுக்கு இது ஒரு முன்மாதிரியான திருமணமாகவும் திகழ வேண்டும். கர்த்தர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாக செய்து வருகிறார், வருவார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக ஆமென்.

3. நாங்கள் எங்கள் மகனுடைய வாழ்க்கை துணையை தெரிந்துக் கொள்ளும் விஷயத்தில், இந்த காரியத்தை தேவனுடைய பாதத்தில் வைத்து, அவர் சமுகத்தில் தரித்திரிந்து, கர்த்தரை எங்களுக்கு முன்பாக வைத்து, அவரை எலியேசராக செயல்பட அழைத்து, அவருடைய சித்தத்தை அறிந்து, ஜெபசிந்தையுடன் செயல்பட்டோம். மூன்று ஆண்டுகளுக்கு பின் கர்த்தர் காரியத்தை வாய்க்கச் செய்தார். இப்பொழுது இந்த காரியம் கர்த்தரால் வந்தது என்று கூறி நாங்கள் கர்த்தருடைய நாமத்தை தொழுதுக் கொள்ளுகிறோம். கர்த்தர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாய்ச் செய்கிறார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

சகோ. காலேப் யோசுவா